அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 03 /2018
தேதி : 11.01.2018

**இஸ்ரோ தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் கே.சிவன் அவர்களுக்கு**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ரா.சரத்குமார் வாழ்த்து**

தமிழகத்தை சேர்ந்த கே.சிவன் அவர்கள் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவராகி இருப்பது மிக்க மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது.

வளர்ந்த நாடுகளுக்கு இடையே நமது தேசம் விண்வெளி ஆராய்ச்சியில் முன்னோடி நாடாக திகழ்ந்துவரும் இந்த தருணத்தில் கே.சிவன் அவர்களின் அறிவும், அனுபவமும் இத்துறையில் இந்தியாவை முதலிடத்திற்கு எடுத்துச்செல்லும் என்ற நம்பிக்கை உள்ளது. உலக அளவில் ஒரு தமிழரின் புகழ் பேசப்படும் அளவிற்கு விண்வெளி ஆராய்ச்சி நிறுவன தலைவராக பொறுப்பேற்றிருக்கும் சிவன் அவர்களுக்கு பாராட்டுக்களையும், அவரது பணி சிறக்க அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com